# அழியாச் செல்வம்

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஒருவர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வம் _____

அ) வீடு

ஆ) கல்வி ✓

இ) பொருள்

ஈ) அணிகலன்

2. கல்வியைப் போல் ______ செல்வம் வேறில்லை.

அ) விலையில்லாத

ஆ) கேடில்லாத ✓

இ) உயர்வில்லாத

ஈ) தவறில்லாத

3.'வாய்த்தீயின்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) வாய்த்து + ஈயின் ✓

ஆ) வாய் + தீயின்

இ) வாய்த்து + தீயின்

ஈ) வாய் + ஈயின்

4. 'கேடில்லை ' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) கேடி + இல்லை

ஆ) கே + இல்லை

இ) கேள்வி + இல்லை.

ஈ) கேடு + இல்லை ✓

5. எவன் + ஒருவன் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

அ) எவன்ஒருவன்

ஆ) எவன்னொருவன்

இ) எவனொருவன் ✓

ஈ) ஏன்னொருவன்

குறுவினாக்கள்

1. நாலடியார் குறிப்பு வரைக

   நாலடியார் சமண முனிவர்கள் பலரால் எழுதப்பட்ட நூலாகும். இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும். இது நானூறு வெண்பாக்களால் ஆனது. இந்நூலை நாலடி நானூறு என்றும், வேளாண் வேதம் என்றும் அழைப்பர். திருக்குறள் போன்றே அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் பகுப்புக் கொண்டது. இந்நூல் திருக்குறளுக்கு இணையாக வைத்துப் போற்றப்படுவதை நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்னும் தொடர் மூலம் அறியலாம்.

2. கல்விச் செல்வம் குறித்து நாலடியார் கூறும் கருத்துக்கள்:

கல்வியைப் பொருள் போல வைத்திருப்பினும் அது பிறரால் கொள்ளப்படாது. ஒருவற்கு வாய்க்கும்படி கொடுத்தாலும் குறைவுபடாது. மிக்க சிறப்பினை உடைய அரசராலும் கவர முடியாது. ஆதலால் ஒருவர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வம் கல்வியே ஆகும். மற்றவை செல்வமாகாது.